1974 சனவரி 28]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏதுமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளி துவங்கப்பட்டு சில ஆண்டுகளாகியும் பள்ளிக் கட்டடம் இல்லாமல், இன்னும் மாணவர்கள் மரத்தடியில் படித்து வருகிறார்கள். ஆகவே, பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து சிறப்பு நிதி ஒதுக்கி, ஒரு தனிக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எந்த ஒரு உயர்நிலைப் பள்ளியானாலும், அதற்காக ஐந்து ஏக்கரா நிலம் தரவேண்டும். பத்தாயிரம் ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், கட்டடத்திற்காக ரூ. 12,500 தரவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். ஆனால், எங்களிடத்திலிருந்து அனுமதி பெறும்போது, "நாங்கள் எப்படியும் கட்டடம் கட்டிவிடுகிறோம், அனுமதி தாருங்கள்" என்று கேட்கிறார்கள். பணத்தை வாங்கிக்கொண்டு அனுமதி தந்திருந்தால் இப்படிப்பட்ட சங்கடங்களுக்கு இடம் ஏற்படாது. ஆனால், அந்த இடத்திலுள்ளவர்கள் 12,500 ரூபாய் கட்டட நிதியாகத் திரட்டித் தருவதாகச் சொன்ன தொகை இன்னும் கட்டப்படவில்லை. ஆகவே, அதற்கான முயற்சியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக்கொண்டால் அரசாங்கத்தின் அளவில் ஒரு பங்கோ அல்லது இரண்டு பங்கோ கூட செலுத்தி, கட்டடங்களைக் கட்டும் முயற்சியை மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரியின் மூலமாக மேற்கொள்ளலாம்.

மாயூரம் நகராட்சிப் பள்ளிக் கட்டடங்கள்

*184 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1972–73-ஆம் ஆண்டில், மாயூரம் நகராட்சிக்கு துவக்கப்பள்ளிகள் கட்டிக்கொள்வதற்கென அரசு வழங்கிய கடன் மற்றும் மானியத்தொகை முறையே எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1972–73-ஆம் ஆண்டில் மாயூரம் நகராட்சிக்கு துவக்கப்பள்ளிக் கட்டிக் கொள்வதற்கென கடன் மற்றும் மானியத் தொகை எதுவும் வழங்கப்படவில்லை.

Islamic contribution for Tamil

*185 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to conduct any research into the Islamic contribution for Tamil in this State; and

(b) if so, the details thereof?